00123

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் மட்டம் - 05

**LLU5811/LWU3314 – சுற்றாடல் சட்டம்**

இறுதிப் பரீட்சை - 2022 / 2023

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 27 மார்ச் 2024 நேரம்: மு.ப.09.30 - பி.ப.12.30

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

பரீட்சை மண்டபத்தில் உம்முடன் அதிகாரபூர்வமற்ற ஆவணங்கள்,கையடக்கத்தொலைபேசிகள் மற்றும் ஏதேனும் பிற இலத்திரனியல் கருவிகள் என்பனவற்றை கொண்டிருத்தல் பரீட்சை குற்றம் ஆகும்.

**பகுதி I இலிருந்து முதலாவது வினாவிற்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று வினாக்களிற்கும் விடையளிக்க.**

பகுதி I - இவ்வினா கட்டாயமானது ( 40 புள்ளிகள்)

1. செரண்டிப் அரசாங்கம் ஆனது நாட்டின் போக்குவரத்து முறைமையை மேம்படுத்த தீர்மானித்ததுடன் ஒரு போக்குவரத்து மகா திட்டத்தையும் விருத்தி செய்தது. இத்திட்டம் ஆனது பல்வேறு நகரங்களை இணைக்கின்ற நெடுஞ்சாலைகள் முறைமையை முன்வைக்கிறது. அடுத்துவரும் ஐந்து வருடங்களில் நாட்டின் மேல், தென், மத்திய மாகாணங்களை இணைக்கின்ற மூன்று நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்நெடுஞ்சாலைகள் பின்வரும் சுற்றாடல் மற்றும் சமூகத் தாக்கங்களை கொண்டுள்ளன.

அ) நாடு முழுதும் உள்ள ஒரு மில்லியனிற்கு மேற்பட்ட ஏற்பட்ட மக்கள் இடம் நகர வேண்டி நேரிடும்.

ஆ) பிரதானமாக விவசாய மற்றும் இருப்பிட நிலம் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான ஹெக்டர்களில் நிலப்பரப்பு கைக்கொள்ளப்படும். ஏறத்தாழ 200,000 விவசாயிகள் இடம் நகர வேண்டி ஏற்படும்.

இ) பல ஆயிரக்கணக்கான ஹெக்டர் நிலப்பரப்பில் காடுகள் நெடுஞ்சாலைகளுக்காகவும், இடம் நகர்பவர்களை குடியேற்றுவதற்காகவும் அழிக்கப்படும். இக்காடுகளுள், தவளை வர்க்கமொன்றின் ஒரே வாழிடம் என்று நம்பப்படுகின்ற ஒரு காடு அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

ஈ) ரம்சார் பகுதி என பிரகடனப்படுத்தப்பட்ட ஈர நிலப்பரப்பு ஒன்றினூடு இரண்டு நெடுஞ்சாலைகள் கட்டப்படும். இந்த ஈரநிலப்பரப்பு பல அழிந்துவரும் பறவை வர்க்கங்களின் இனவிருத்திக்கான அடிப்படைகளாகவும் உள்ளது. ஒரு பிரதானமான நெடுஞ்சாலை யானைகளின் இருப்பிடத்தினூடு அமைகிறது.

செரண்டிப்பின் சட்டமுறைமை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு என்பன இலங்கையை ஒத்தன.

EIA வாட்ச் எனப் பெயரிடப்பட்ட அரச சார்பற்ற தாபனம் ஒன்று இத்திட்டம் பொது மீளாய்விற்காக முன்வைக்கப்பட்டுள்ள போது இது குறித்து அதன் எதிர்ப்புகளை சமர்ப்பித்திருந்தது. இவ் எதிர்ப்புகள் மூன்று நெடுஞ்சாலைகளுக்குமான அனுமதியை உறுதி செய்த திட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மையால் (PAA) புறம் ஒதுக்கி வைக்கப்பட்டன.

EIA வாட்ச் அரச சார்பற்ற தாபனமானது மூன்று நெடுஞ்சாலைகளையும் அங்கீகரித்த PAA இன் தீர்மானத்தினையும் போக்குவரத்து மகா திட்டத்தினையும் கேள்விக்குட்படுத்த உட்படுத்தவும் விரும்புகிறது.

இவர்கள் இதனை மேற்கொள்ள முடியுமா என்றும் எந்த அடிப்படையில் மேற்கொள்ளலாம் என்றும் ஆராய்க. உமது விடை இலங்கை மற்றும் பிற நியாயாதிக்கங்களிலிருந்து பொருத்தமான சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டம் என்பனவற்றால் ஆதாரப்பட வேண்டும்.

**பகுதி II - இப்பகுதியிலிருந்து மூன்று வினாக்களிற்கு விடையளிக்க. (ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்)**

2. நிகழ்காலத்திலுள்ள சமுதாயங்களானவை மனித நடவடிக்கையால் மீளமைக்க இயலாதவாறு ஒரு நாள் சேதப்படாத பூமியை எதிர்வரும் சமுதாயங்களிற்கு கையளிப்பதற்கான பொறுப்புடைமையை கொண்டுள்ளன. பூமியை தற்காலிகமாக உரிமைகொள்ளும் ஒவ்வொரு சமுதாயமும் அதன் இயற்கை வளங்களை நியாயமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன், இயற்கை முறைமையில் ஏற்படுத்தப்படும் ஆபத்தான மாற்றங்களால் வாழ்வு அமையக்கூடாது என்றும் சகல துறைகளிலுமான விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப முன்னேற்றம் பூமியில் வாழ்வினை பாதிக்கக்கூடாது என்றும் உறுதிபடுத்த வேண்டும்.

   (Declaration on the Responsibilities of the Present Generations towards Future Generations – Article 4)

   எதிர்கால சமுதாயங்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த இலங்கை மற்றும் பிற நியாயாதிக்கங்களில் நீதிமன்றங்கள் எவ்வாறு முயற்சி செய்துள்ளன என ஆராய்க. உமது விடை தீர்ப்புச்சட்டத்தால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்

3. "அண்மைக்காலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதானமான சுற்றாடல் சமவாயங்களில் நிலைபேண்தகு அபிவிருத்தி கோட்பாடு ஆனது உள்வாங்கப்பட்டு பிரதிபலிக்கப்பட்டுள்ளமையே மிகவும் முக்கியமானது ஆகும்."

   (UNEP's New Way Forward: Environmental Law and Sustainable Development)

   நீர் கற்றுள்ள **மூன்று** சர்வதேச சுற்றாடல் சமவாயங்களை தெரிவு செய்து அவற்றின் உறுப்புரைகள் எவ்வாறு நிலைபேண்தகு அபிவிருத்திக் கோட்பாட்டுடன் தொடர்புறுகின்றன என்றும் அவற்றின் செயற்றிறனையும் ஆராய்க. நீர் இலங்கை முதலான நாடுகளின் நிலை குறித்து குறிப்பாக நோக்குக.

4. பெக்டரிவத்த என்பது 100,000 மக்கள் தொகையைக் கொண்ட குறைந்த வருமானம் பெறுபவர்களின் மஹனகர நகரின் ஒரு குடியேற்றம் ஆகும். இந்த பெக்டரிவத்த ஆனது அரைவாசிக்கும் மேற்பட்ட குடியிருப்பு வாசிகளிற்கு குறைந்த சம்பளத்துடன் வேலைவாய்ப்பை வழங்கும் ஒரு இரசாயன தொழிற்சாலையை சுற்றி விருத்தியடைந்துள்ளது. இம்மக்கள் இவர்களது வீடுகளை தொழிற்சாலையை சுற்றிக் கட்டியுள்ளதுடன், தொழிற்சாலையின் வளாகத்தில் சுகாதாரம், சுத்தமான குடிநீர் அல்லது சுகாதாரம் என்பவற்றிற்கான அணுகல் முதலான அடிப்படை தேவைகளின்றி சிறிய கூடாரங்களில் வாழ்கின்றனர். மேலதிகமாக, தொழிற்சாலையில் இருந்து வெளியகற்றப்படும் கழிவு, அருகாமையில் வாழுகின்ற சிறுவர்களிடையே சுவாச பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. அருகே உள்ள மக்களால் அவர்களது குடிநீருக்கும், குளிப்பதற்குமான மூலாதாரமாக பயன்படுத்தப்படும் தொழிற்சாலை அருகே உள்ள நீர் ஓடை ஆனது மாசுற்றுள்ளது.

இது குறித்து கரிசனையுற்றுள்ள குடியிருப்பு வாசிகளின் ஒரு குழுவினர் அருகாமையிலுள்ள மக்களிற்கு தொழிற்சாலையானது பொது தொந்தரவு ஒன்றையும், சுகாதாரக் கேடு ஒன்றையும் ஏற்படுத்துகின்றது என்பதன் அடிப்படையில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்ய விரும்புகிறனர். தொழிற்சாலையானது, அது தொழில் வலயத்தில் கட்டப்பட்டுள்ளதாகவும், சுற்றாடல் அதிகார சபைகள் மற்றும் மஹனகர மாநகரசபை முதலானவற்றில் இருந்து தேவையான சகல அனுமதிகளையம் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகிறது. மேலும், அதன் செயற்பாடுகளில் இருந்தான மாசினை குறைப்பதற்கு கிடைக்கப்பெறும் சகல தொழிநுட்பத்தையும் பயன்படுத்துவதாகவும் குறிப்பிடுகிறது. இது வதிவிட வலயம் அல்லாத பகுதியில் சட்டவிரோதமாக பெக்டரிவத்த குடியேற்றம் இடம்பெற்றுள்ளதையும் எடுத்துக்காட்டுகிறது. மேலும் பல தொழிற்சாலை ஆனது நூற்றுகணக்கான மக்களிற்கு வேலைவாய்ப்புக்களை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிடுகிறது.

குடியிருப்பு வாசிகளது முறையீடுகளிற்கு பதிலுரைப்பதாக மஹனகர மாநகரசபை ஆனது, அதன் பெரும்பாகத்து வருமானம் தொழிற்சாலையின் வரிப்பணத்தில் தங்கியுள்ளதாக சுட்டிக்காட்டுகிறது. சபையானது, இப்பணமின்றி நகரின் கட்டமைப்பை விருத்தியமைக்கவும் வீதிகள், குப்பைகளை அகற்றுதல், சுகாதாரம் முதலான சேவைகளை பேணவும் இயலாது எனக் கூறுகிறது.

இதேவேளை, தொழிற்சாலையில் இடம்பெற்ற வெடிப்பு ஒன்றினாலான தீயானது பெக்டரிவத்தவின் அரைவாசிக்கு மேற்பட்ட வீடுகளை அழித்தது. முன் பாடசாலை ஒன்றில் அகப்பட்டிருந்த ஏழு சிறுவர்கள் இத்தீயிற்கு இரையாகி இறந்தனர்.

இது தொடர்பில் குடியிருப்புவாசிகள் மாநகரசபை மற்றும் தொழிற்சாலை அதிகாரசபைகளிற்கு எதிராக வழக்கிட விரும்புகின்றனர். இவ்வழக்கில் எழும் சுற்றாடல் மற்றும் மனித உரிமைகள் சார் விடயங்களை பொருத்தமான சட்ட மற்றும் சட்டக் கோட்பாடுகளுடன் விளக்குக.

5. “சகல மக்களிற்கும் சுத்தமானதும், ஆரோக்கியமானதும், நிலைபேணத்தக்கதுமான ஒரு சுற்றாடலிற்கான உரிமை காணப்படுகின்றது. மனித உரிமைகளும் சுற்றாடலும் ஒன்றோடொன்று இணைந்து இருப்பதால், உயிர் வாழ்வதற்கும், ஆரோக்கியத்திற்கும், உணவிற்கும், நீரிற்கும், சுகாதாரத்திற்கும், விருத்திக்குமான உரிமை உள்ளடங்கலாக ஏனைய உரிமைகளிற்கான முழுமையான அனுபவிப்பதற்கு சுத்தமானதும், சுகாதாரமானதும், நிலைபேணத்தக்கதுமான ஒரு சுற்றாடல் அவசியமானது ஆகும்”.

(What is the right to a healthy environment – Information Note – UNDP/UNEP/OHCHR)

இலங்கை மற்றும் பிற நியாயாதிக்கங்களின் நீதிமன்றங்கள் எவ்வாறு ஆரோக்கியமான ஒரு சுற்றாடலிற்கான உரிமையை பரந்த ஒரு சமூக – பொருளாதார உரிமைகளுடன் தொடர்புபடுத்தியுள்ளன என விளக்குக. உமது விடையில் தீர்ப்புச் சட்டங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்

6. மஹகல்ல எனும் நகர் ஆனது 700 வருடகால பழைமையான கோட்டை ஒன்றைக் கொண்டுள்ளது. இக்கோட்டை 1988 இல் உலக பாரம்பரிய தளம் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் கீழ் தொல்லியல் காப்பகம் ஒன்றையும் கொண்டுள்ளது.

கோட்டையானது எப்போதும் உள்ளூர் வாசிகளால் கையகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவர்கள் அப்பகுதியில் வீடுகளை கட்டியிருந்ததுடன், அங்கு அவர்கள் வசிக்கவும் அனுமதியளிக்கப்பட்டிருந்தனர். அண்மையில் பல குடியிருப்பு வாசிகள் தமது வீடுகளை ஹோட்டல்களாகவும், உணவகங்களாகவும் மாற்றுவதற்காக அதிக விலைக்கு வெளிநாட்டவர்களிற்கு விற்பதற்கு ஆரம்பித்துள்ளனர். சில குடியிருப்பு வாசிகள் கோட்டைக்குள் புதைக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ள பண்டைய நாணயங்கள் மற்றும் பிற பொருட்கள் என்பனவற்றிற்காக அகழ்வும் ஆரம்பித்துள்ளனர். மேலும் இவர்கள் தமது வீடுகளை அதிக கட்டமைப்பு மாற்றத்துடன் மாற்றியமைக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

கலாசார பாரம்பரியப் பாதுகாப்பிற்கான சங்கத்தின் உறுப்பினர்கள் லால் மற்றும் நவீன் ஆகியோர் ஆவர். இவர்கள் கோட்டைக்குள் நடைபெறும் நிகழ்வுகள் மீதும், தொல்லியல் இயக்குனர் இவர்களை தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதன் மீதும் அதிக கரிசனை கொண்டுள்ளனர். கோட்டையில் இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட அறிவுரையைப் பெற இவர்கள் உம்மை நாடி வந்துள்ளனர்.

உமது விடையை உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களை எடுத்துக்காட்டி அறிவுறுத்துக.

- பதிப்புரிமை பெற்றது -